# யாப்பு

## I. பெயர், இருப்பிடம் மற்றும் நோக்கம்

**விதி 1**

இதன் பெயர் வருமாறு

### கலை கலாச்சாரச் சங்கம் முருகன் Toffen Bern

மேலுள்ள பெயரைக்கொண்டு மற்றும் சுவிஸ் குடியியல் சட்டப்புத்தகவிதி 60 ff பிரகாரம் Toffen ஐ இச் சங்கம் இருப்பிடமாகக் கொண்டுள்ளது.

**விதி 2**

இச் சங்கத்தின் நோக்கம், சமயம் மற்றும் சுவிசில் வாழும் தமிழர்களின் கலைகலாச்சாரத்தைப் பராமரிப்பது மற்றும் அவர்களின் சமயப் பராமரிப்பை சிறப்பாக்குவதாகும்.

இச் சங்கம் செயற்பாடுகளில் பங்கெடுப்பது மற்றும் சமூக ரீதியாக பங்களிப்புச்செய்யலாம் என்பதுடன், காணிகளை வாங்குவது மற்றும் விற்பது மற்றும் அனைத்து வியாபாரப் பேச்சுக்களில் ஈடுபடுவது மற்றும் சங்கத்தின் நோக்கத்தை ஊக்குவிக்க, அல்லது நேரடியாக அல்லது மறைமுகமாக அதற்குத் தகுந்த ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளலாம்.

**விதி 3**

இந்தச் சங்கம் Toffen இலுள்ள இந்துசமய முருகன் ஆலயத்தை நிர்வாகிக்கும். அத்துடன் இது பேர்ண் பிரதேசத்தில் வாழும் தமிழர்களுக்கான மேலதிக வசதிகளையும் கவனித்துக்கொள்ளும், உ-ம். கலாச்சார மண்டபம், நூல்நிலையம், பிள்ளைகள் பராமரிப்பு, பெண்களுக்கான ஆலோசனை நிலையம், தமிழர்களின்-, சமய- மற்றும் நடன வகுப்பு, வயோதிபர்களுக்கான ஓய்வுநிலையம் போன்றவை.

இச் சங்கம் சுவிசிலுள்ள மற்றும் இலங்கை மற்றும் இந்தியாவிலுள்ள தமிழ் சமய அமைப்புகளுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவதுடன் அவைகளுக்கும் உதவி வழங்க முடியும். இச் சங்கம் தமிழர்களின் நன்மைகருதி சுவிஸ் அமைப்புக்களுடனும் திணைக்களங்களுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும்.

இச் சங்கம் விருப்பப்படும் நபர்களுக்கு சமய நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான முன்நிபந்தனைகளை ஏற்படுத்திக்கொள்ளும்.

# II. உறுப்பினராகுதல்

**விதி 4**

உறுபினராவதற்கு எழுத்துமூலமாக அங்கத்துவ விண்ணப்பத்தைச் செய்து நிர்வாகசபையின் முடிவைப்பெற வேண்டும். நிர்வாகசபை, அங்கத்துவ விண்ணப்பத்தை நிராகரித்தால், சம்பந்தப்பட்டவர் நிர்வாகசபைக்கு எழுத்துமூலமாக விண்ணப்பித்து அடுத்துவரும் சங்கக்கூட்டத்தில் இறுதி முடிவைத் தெரிவிக்குமாறு கேட்கலாம்.

**விதி 5**

உறுப்பினர்கள் வருடாந்தம் உறுப்பினருக்கான கட்டணத்தைச் செலுத்தவேண்டும், இதன் தொகை சங்கக்கூட்டத்தில் முடிவுசெய்யப்படும்.

ஒவ்வொரு உறுப்பினரும், இல்ல ஒழுங்குகளைக் கடைப்பிடிக்கக் கடமைப்பட்டுள்ளதுடன் நிகழ்வுகளின்போது பொறுப்புவகிக்கும் நபர்களின் மற்றும் நிர்வாகசபையினரின் அறிவுறுத்தல்களைக் கேட்டு நடக்க வேண்டும்.

**விதி 6**

ஒரு உறுப்பினர் சங்கத்திலிருந்து வெளியேற விரும்பினால் எழுத்துமூலமாக வெளியேறும் விளக்கத்தை வழங்க வேண்டும், இதன்படி சங்க வருட முடிவில் உறுபினரின் அங்கத்துவம் முடிவுக்குவரும்.

உறுப்பினர்கள், எச்சரிக்கை செய்திருந்தும் இரு வருடங்களுக்கு வருடாந்தக் கட்டணத்தைச் செலுத்தாமல் இருந்தால், நிர்வாக சபையின் முடிவிற்கு அமைவாக விலக்கப்படுவார்கள்.

உறுப்பினர்கள், மரியாதைக் குறைவாக நடந்து குற்றமிழைத்தால் அல்லது சங்கத்தின் பெயருக்குப் பாதிப்பை ஏற்படுத்தினால், நிர்வாகசபையின் விண்ணப்பத்தின்பேரில், சங்கக்கூட்டத்தின் முடிவின்படி உடனடியாக அமுலுக்குவரும் வகையில் நீக்கப்படுவார்கள்.

உறுப்பினர்கள், யாராவது இல்ல ஒழுங்குகளை அல்லது நிகழ்வுகளின்போது பொறுப்பு வகிக்கும் நபர்களின் மற்றும் நிர்வாகசபையினரின் அறிவுறுத்தல்களைக் கேட்டு நடக்காவிட்டால், நிர்வாகசபையால் நீக்கப்படலாம். இவ்வாறான முடிவின்போது அந்த உறுப்பினர் 30 நாட்களுக்குள்ளாக எழுத்துமூலமாக நிர்வாகசபைக்கு ஆட்சேபனையைத் தெரிவிக்கலாம், இவ்வாறாயின் அடுத்துவரும் சங்கக்கூட்டத்தில் இறுதி முடிவு எடுக்கப்படும், இதன்போது சம்பந்தப்பட்ட உறுப்பினர் சங்கக்கூட்டத்தில் பேசுவதற்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆட்சேபனை செய்வதற்கான காலம் முடியும் தவணை தொடக்கம் இறுதிமுடிவு எடுக்கப்படும்வரை உறுப்பினரின் அங்கத்துவம் தடுத்து வைக்கப்படும், அத்துடன் உறுப்பினர் தனது அங்கத்துவ உரிமையைப் பாவித்துக்கொள்ள முடியாது.

**விதி 7**

உறுப்பினர் அங்கத்துவம் முடிவடைந்த பின்பு, சங்கம் சம்பந்தமான அனைத்து பத்திரங்கள் மற்றும் பதிவுகளை, ஒரு மாதகாலத்துக்குள் நிர்வாகசபையின் செயலாளருக்கு மீளவும ஒப்படைக்க வேண்டும்.

# III. சங்கத்தின் உறுப்புகள்

## A. சங்கக்கூட்டம்

### விதி 8

சங்கத்தின் அதிஉயர் உறுப்பாக சங்கக்கூட்டம் இருக்கும், இது அனைத்து உறுப்பினர்களும் ஒன்றுசேர்ந்து அமைந்திருக்கும்.

### விதி 9

சங்கக்கூட்டம் நிர்வாகக்குழுவால் கூட்டப்படும், அதாவது செயற்பாட்டிற்கு எந்த வேளைகளிலும் தேவைப்படுமாக இருந்தால் அதேபோன்று அனைத்து உறுப்பினர்களிலும் ஐந்தில் ஒரு பங்கு அங்கத்தவர்கள் எழுத்துமூலமாகக் கோரினால் கூட்டப்பட வேண்டும்.

ஒவ்வொரு சங்க வருட முடிவிலும் மூன்று மாதத்திற்கு உள்ளாக ஒரு சங்கக்கூட்டம் ஒரு பொதுக்கூட்டமாக நடைபெற வேண்டும், இதில் கடந்துசென்ற வருடக் கணக்குகள் மற்றும் எதிர்வரும் சங்க வருட வரவுசெலவு பட்ஜெட் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் தேர்தலும் நடத்தப்பட வேண்டும்.

சங்கக்கூட்டத்திற்கான அழைப்பு ஆகக்குறைந்தது கூட்டத்திற்கு பதிநான்கு நாட்களுக்கு முன்பாக அங்கு ஆலோசிக்கப்படவுள்ள நிகழ்ச்சி நிரல்கள் பட்டியலிட்டு எழுத்து மூலமாக அனைத்து உறுப்பினர்களுக்கும் அறியத்தருவதுடன் சங்கத்தின் இணையத்தளத்திலும் வெளியிடப்பட வேண்டும். பொதுக்கூட்டத்தைப் பொறுத்தவரை அழைப்பு ஆகக்குறைந்தது கூட்டத்திற்கு முப்பது நாட்கள் முன்பாக அனுப்பிவைக்க வேண்டும்.

### விதி 10

யாப்பில் வேறுவிதமாக எழுதப்பட்டிருந்தாலன்றி, சங்கக்கூட்டம் தனது முடிவுகளை சாதாரணமாக சமூகமளித்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையை வைத்துத் தீர்மானித்துக்கொள்ளும். ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு வாக்கு இருக்கும்.

### விதி 11

உறுப்பினர்களது கூட்டம் நிர்வாகக்குழுவின் தலைவரால் தலைமையேற்று நடத்தப்படும். தற்சமயம் அவரால் வரமுடியாவிட்டால் உப தலைவர் கூட்டத்தை நடத்துவார், அவராலும் வரமுடியாவிட்டால், கூட்ட உறுப்பினர்கள் ஒருவரை நாள் தலைவராகத் தெரிவுசெய்து கூட்டத்தை நடத்துவார்கள்.

## விதி 12

விசேடமாக சங்கக்கூட்டம் பின்வரும் அதிகாரங்கள் மற்றவர்களுக்கு கொடுக்கமுடியாததாக உள்ளது:

1. பொதுக்கூட்டத்தில் ஒரு நாள் தலைவரைத் தெரிவுசெய்வது,
2. தலைவர் தெரிவு மற்றும் நிர்வாகசபையின் ஏனைய தெரிவுகள்
3. கட்டிட ஆணையத்தின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் தெரிவு
4. கணக்குப் பரிசோதகரின் தெரிவு
5. குருக்களின் தெரிவு
6. வருடக் கணக்குக்கு ஒப்புதல் வழங்குதல்
7. நிர்வாக மற்றும் கட்டிட ஆணைய உறுப்பினர்களை நீக்குதல்
8. பாதீட்டு எனும் பட்யெட்டக்கு அனுமதியளித்தல்
9. உறுப்பினர்களைச் சேர்த்தல் மற்றும் விலக்குதல் பற்றிய இறுதிமுடிவெடுத்தல்
10. ஏனைய அனைத்துச் செயற்பாடுகளையும் கையாளுதல், அதாவது யாப்பின் பிரகாரம் வேறொரு சங்க உறுப்பின் திறனுக்குள் வராமல் இருத்தல் வேண்டும்
11. யாப்பைத் திருத்துதல்
12. சங்கத்தைக் கலைத்தல்.

## விதி 13

சங்கக்கூட்டம் ஏதாவது வேறுவிதமாகத் தீர்மானித்தாலன்றி, சங்கக்கூட்டத்தின் வாக்கெடுப்பு வெளிப்படையாக கை உயர்த்துதலின் பிரகாரம் இடம்பெறும்.

சங்கக்கூட்ட உறுப்பினர்களுக்குப் பதிலாக நிர்வாகசபை சங்க உறுப்பினர்களிடையே ஒரு எழுத்து வடிவான வாக்கெடுப்பை ஒருதடவை நடத்த முடிவுசெய்யலாம், இதன்போது ஒவ்வொரு உறுப்பினரும் சரியாக ஒரு வாக்குடன் வாக்களிப்பில் பங்கேற்பதை உறுதிப்படுத்த வேண்டும். நிர்வாகக் குழுவின் செயலாளர் வாக்குச்சீட்டுக்களை விநியோகிக்க வேண்டும் அத்துடன் பெறப்பட்ட பதில்களை உறுப்பினர்களின் பட்டியலில் பதிவு செய்ய வேண்டும். முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்பு ஒரு வருடத்திற்கு பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து வாக்குச்சீட்டுக்களையும் அவர் பாதுகாத்து வைத்திருக்க வேண்டும்.

## விதி 14

சங்ககூட்டத் தேர்தல்கள் எழுத்து வடிவமாக மற்றும் இரகசியமாக நடைபெறும். நிர்வாகசபை, இயலுமானவரை எப்பொழுதும் ஆகக்குறைந்தது ஒரு பதவிக்கு இரண்டு போட்டியாளர்கள் தேர்வில் பங்கேற்பதைக் கவனித்துக்கொள்ள வேண்டும்.

## B. நாள் தலைவர்

**விதி 15**

ஒவ்வொரு பொதுக்கூட்டத்திலும் நிகழ்ச்சி நிரல்கள் ஆராயப்பட்டு முடிந்ததும் „கடந்தவருடக் கணக்கு" மற்றும் „வருட அறிக்கை" என்பன அங்கு வருகைதந்திருக்கும் உறுப்பினர் வட்டத்தில் ஒரு நாள் தலைவர் தெரிவுசெய்யப்பட்டு, அவருக்கு நிர்வாகக்குழுவின் பத்திரங்கள் வழங்கப்பட்டு, அவற்றை அவர் பரிசீலிப்பார்.

நாள்தலைவர் „நிர்வாகத்தை நீக்குதல்" மற்றும் „புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய்தலை" நடத்துவார், இதன் முடிவில் கூட்டம் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக்குழுவின் தலைவரால் தொடர்ந்து நடத்தப்படும்.

நாள்தலைவர் பரிசீலித்த பத்திரங்களை புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகக்குழுவிடம் கையளிப்பார். பெற்றுக்கொள்ளுதல் மற்றும் மீளவழங்குதல் தனியான ஒரு அறிக்கையாகப் பதிவுசெய்யப்படும், இதில் நாள் தலைவர் மற்றும் பழைய மற்றும் புதிய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் கையொப்பமிடுவார்கள்.

## C. நிர்வாகக்குழு

**விதி 16**

நிர்வாகக்குழுவில் தலைவர், உப தலைவர், பொருளாளர், செயலாளர், உப செயலாளர் மற்றும் ஒரு ஒற்றைத் தானத்தில் ஆகக்கூடியது மேலும் ஏழு உறுப்பினர்கள் (உடனிருப்பவர்கள்) இருப்பார்கள், இவர்களது பதவிக்காலம் சங்கக் கூட்டம் நடைபெற்று அதில் குறிப்பிட்ட நிர்வாகக்குழுவைத் தெரிவுசெய்தபின் மூன்று வருடமாக அமைந்திருக்கும்.

மீளவும் தேர்வு செய்வதற்கு எவ்வித தடைகளுமின்றி சந்தர்ப்பம் உள்ளது.

**விதி 17**

நிர்வாகக்குழுவிற்கான புதிய வேட்பாளர்கள், கூட்டத்திற்கு முன்பாக எழுத்துமூலமாக மற்றும் அவர்கள் போட்டியிட விரும்பும் பதவியைக் குறிப்பிட வேண்டும். இந்த விண்ணப்பத்தில் குறைந்தது ஐந்து சங்க உறுப்பினர்களும் சேர்ந்து கையொப்பமிட்டிருக்க வேண்டும். ஒரு பதவிக்கு வேட்புமனு சமர்ப்பிக்கவில்லை என்றால் அல்லது விண்ணப்பித்த வேட்பாளர்கள் எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், கூட்டத்திலிருக்கும் ஐந்து உறுப்பினர்களால் எந்த ஒரு உறுப்பினராவது முன்மொழியப்படலாம்.

**விதி 18**

நிர்வாகக்குழு உறுப்பினர் ஒருவர், தலைவரைத் தவிர, பதவிக்காலம் முடிவதற்குள் பதவியைத் துறந்தால், நிர்வாகக்குழு தகுதியின் அடிப்படையில் தமக்கிடையே அடுத்த பொதுக்கூட்டம்வரை புதிதாக மற்றும்.:அல்லது வேறொருவரைத் தெரிவுசெய்யும். தலைவர் பதவி துறந்தால், அடுத்த சங்கக்கூட்டம்வரை உபதலைவர் தலைவராக மாறுவார்.

### விதி 19

யாப்பின் பிரகாரம் வேறு உறுப்பு, விசேடமாக கட்டிட ஆணையம் பொறுப்பு வகிக்காவிட்டால், சங்கத்தின் செயற்பாட்டை நிர்வாகக்குழு கவனித்துக்கொள்ளும். அதற்குப் பின்வரும் கடமைகள் உள்ளன:

1. சங்கத்தை மேலாண்மையுடன் நடத்தல் மற்றும் தேவைப்படும் அறிவுறுத்தல்களை வழங்குதல்
2. சட்டவிதிகள் மற்றும் யாப்பின் கட்டமைப்பிற்குள் அமைப்பை நிறுவுதல்
3. கணக்குகளை வடிவமைப்பது, நிதிக்கண்காணிப்பு மற்றும் சங்கப் பணத்துக்கான நிதித்திட்டமிடல்
4. வருடமுடிவில் Fr. 25'000.00 க்கு மேலான சங்கப்பணத்தின் மிகுதியை கட்டிட நிதிக்கு அனுப்பிவைத்தல்
5. சங்கத்தின் நிதிகுறித்து வருடாந்தக் கணக்கு மற்றும் வருடாந்த அறிக்கை தயாரித்தல்
6. சங்கக் கூட்டங்களை தயார்படுத்துவது மற்றும் நடத்துவது அத்துடன் அதன் முடிவுகளை நடைமுறைப்படுத்துவது
7. சங்கக்கூட்டம் மற்றும் நிர்வாகக்குழு எடுக்கும் அனைத்து முடிவுகளையும் பதிவுசெய்தல்
8. சங்கக்கூட்ட உறுப்பினர்களின் இறுதி அதிகாரவரம்பிற்கு உட்பட்டு, உறுப்பினர்களின் சேர்க்கை மற்றும் விலக்குதல் பற்றிய முடிவு.

### விதி 20

நிர்வாகக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொண்டாலோ அல்லது அனைத்து உறுப்பினர்களும் குறைந்தது ஒருவாரத்துக்கு முன்பே அழைக்கப்பட்டிருந்தாலோ மற்றும் அதன் பெரும்பான்மை உறுப்பினர்கள் கலந்துகொண்டாலோ, நிர்வாகக்குழுவுக்கு முடிவெடுக்க உரிமையுள்ளது.

வழங்கப்பட்ட வாக்குகளில் சாதாரண பெரும்பான்மையைக் கொண்டு நிர்வாகக்குழு தனது முடிவை மேற்கொள்ளும். தலைவரும் வாக்களிப்பார் என்பதுடன் வாக்குநிலை சமமாக இருந்தால் தலைவர் முடிவெடுப்பார்.

எந்தவொரு உறுப்பினரும் வாய்வழி ஆலோசனையைக் கோராதிருந்தால், குறிப்பிடப்பட்ட முடிவுகளை எழுத்தில் (மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் மூலமாகவும்) தருமாறு விண்ணப்பிக்க அனுமதியுண்டு. அத்துடன் அனைத்து உறுப்பினர்களும் எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தால் அந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்படும்.

### விதி 21

யாப்பின் பிரகாரம் கட்டிட ஆணையத்துக்குப் பொறுப்பு வழங்கப்படாத ஏனைய விடயங்களில் தலைவர், செயலாளருடன் அல்லது பொருளாளருடன் ஒன்றுசேர்ந்து இருவராக சங்கம் சம்பந்தமான அனைத்து விடயங்களிலும் சட்டரீதியான கையொப்பத்தை இடுவார்கள். தற்சமயம் தலைவரால் இயலாவிட்டால் தலைவருக்காக உபதலைவரும் மற்றும் செயலாளருக்காக உபசெயலாளரும் பிரதிநிதித்துவம் செய்வார்கள்.

## D. கட்டிட ஆணையம்

### விதி 22

கட்டிட ஆணையம் தலைவர், உபதலைவர், பொருளாளர், செயலாளர், உபசெயலாளர் மற்றும் ஒற்றைத்தானத்தில் பத்து தொடக்கம் பதிநான்கு மேலதிக உறுப்பினர்களை (உடன் இருப்பவர்களை) கொண்டிருக்கும். இவர்களது பதவிக்காலம் சங்கக்கூட்டம் இடம்பெற்று அதில் நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்ட நாளில் இருந்து பத்து வருடங்களாக இருக்கும்.

மீளவும் தேர்வு செய்வதற்கு எவ்வித தடைகளுமின்றி சந்தர்ப்பம் உள்ளது.

சங்கக்கூட்டம் கட்டிட ஆணையத்தின் உறுப்பினர்களை நீக்குவதாக இருந்தால், அவர்கள் வழங்கப்படும் வாக்குகளில் ஐந்தில் நான்கு பெரும்பான்மை தேவைப்படும்.

### விதி 23

ஒரு உறுப்பினர் பதவிக்காலம் முடிவதற்கு முன்பாக தனது பதவியைத் துறந்தால், அடுத்துவரும் சங்கக் கூட்டம் வரை அந்தப் பதவி வெற்றிடமாக இருக்கும். தற்சமயம் தலைவர் பதவி துறப்பாராக இருந்தால், உப தலைவர் அடுத்துவரும் சங்கக் கூட்டம் வரையாகத் தலைவராக பதவிவகிப்பார்.

கட்டிட ஆணையத்திற்குப் புதிதாகத தேர்வுசெய்யப்பட்ட உறுப்பினர் அவருக்கு முன்பாக பதவியைத் தொடங்கி இருந்தவருக்குப் பதிலாகப் பதவியேற்றிருந்தாலும், முழுவதுமான ஆணையம் பத்து வருடங்களுக்குப் பின்பு புதிதாகத் தேர்வுசெய்யப்பட வேண்டும்.

### விதி 24

கட்டிட ஆணையத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆகக்குறைந்தது அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பத்து மாதங்களுக்குள்ளாக, மீளவும் வழங்கப்படும் வைப்புத் தொகையாக Fr. 5'000.- கட்டிடநிதியத்திற்குச் செலுத்த வேண்டும். இந்த வைப்புப் பணம் ஒருபக்கத்தில் சங்கம், கட்டிட ஆணைய உறுப்பினருக்கு எதிராகக் கொண்டுவரும் எந்தவொரு கோரிக்கையையும் பாதுகாக்கின்றது, அதேவேளை பதவி துறப்பதற்கு உறுப்பினருக்கு சங்கக்கூட்டம் அனுமதிப்பதுடன், சங்கத்தின் அனைத்துக் கடன்களும் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தால், அது திருப்பிச் செலுத்தப்படும்.

### விதி 25

கட்டிட ஆணையம், சங்கத்தின் பொருளாதாரத்தை நிர்வகிக்கின்றது, அதாவது இது சொந்தமாகக் கட்டப்படும் புதிய ஆலய விடயமாக இருந்தால், அவர்கள் அதற்கான ஒரு பொருத்தமான இடத்தைத் தேடுவார்கள், புதிய ஆலயத்துக்கான கையகப்படுத்தல் மற்றும் புதிய ஆலயத்தின் கட்டுமானப் பணிகளைக் கையாள்வதுடன், அதற்கான நிதித்தேவையை உறுதிப்படுத்திக்கொள்வர்.

மேலும் சங்கக்கூட்டமானது, மேலதிக சொத்துத் திட்டங்களை மேற்கொள்ள முடிவுசெய்தால், இதுபோன்றே கட்டிட ஆணையம் அதற்குப் பொறுப்பு வகிக்கும்.

கட்டிட ஆணையத்திற்குப் பின்வரும் கடமைகள் உள்ளன:

1. பொருத்தமான இடத்தைத் தேடுதல்
2. கட்டும்- அல்லது திருத்தும் வேலைத் திட்டங்கள் குறித்து சங்கக்கூட்டத்தில் விண்ணப்பிப்பது
3. திட்டத்திற்கான நிதியைத் தேடிக்கொள்வது
4. கட்டிடநிதி குறித்த கணக்கியல், நிதிப்பரிசோதனை மற்றும் நிதித்திட்டமிடல்
5. கட்டிடநிதி குறித்து வருடாந்தக் கணக்கு மற்றும் வருடாந்த அறிக்கை
6. சங்கக்கூட்டத்தை ஆயத்தப்படுத்துவது மற்றும் சங்கக்கூட்டத்தின் பொறுப்புப்பகுதியிலிருக்கும் விடயங்கள் குறித்த முடிவுகளை நிறைவேற்றுதல்
7. கட்டிட ஆணையம் எடுக்கும் அனைத்து முடிவுகளையும் எழுத்துவடிவமாக அறிக்கையிடல்
8. அனைத்து சட்டப் பரிவர்த்தனைகளை முடிவுக்குக்கொண்டுவருதல் மற்றும் திட்டமிடலை ஒப்பந்தங்களாக்குவது, செயற்படுத்துவது மற்றும் கட்டுமானத் திட்டங்களுக்கான நிதி வழங்குதல், நிலம் மற்றும் அல்லது கட்டிடங்களை கொள்வனவு செய்வது அல்லது விற்பது மற்றும் அதை நிர்வகிப்பது போன்றவை.

## விதி 26

கட்டிட ஆணையம் முடிவெடுக்கக்கூடியது, அதாவது அனைத்து உறுப்பினர்களும் சமூகமளித்திருந்தால் அல்லது அனைத்து உறுப்பினர்களும் ஆகக்குறைந்தது ஒரு வாரத்துக்கு முன்பாக அழைக்கப்பட்டிருந்தால் மற்றும் உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் வருகை தந்திருந்தால்.

அவர்கள் தமது முடிவை வழங்கப்பட்ட வாக்குகளின் சாதாரண பெரும்பான்மையைக் கொண்டு முடிவுசெய்வார்கள். தலைவரும் வாக்களிப்பார் என்பதுடன் வாக்குநிலை சமமாக இருந்தால் தலைவர் முடிவெடுப்பார்.

எழுத்துவடிவமாக முடிவுகளைத் தொகுத்து (மின்னஞ்சல் மற்றும் தொலைநகல் மூலமாகவும்) தருமாறு விண்ணப்பிக்கலாம், இதன்போது எந்தவொரு உறுப்பினரும் வாய்வழி ஆலோசனையைக் கோராதிருந்தால் இதற்கு அனுமதியுண்டு. அதேவேளை அனைத்து உறுப்பினர்களும் எழுத்து மூலமாக சம்மதம் தெரிவித்தால் அந்த முடிவு ஏற்றுக்கொள்ளப்படும

## விதி 27

நிதி சேர்க்கும் திட்டத்திற்காக நான்கு நபர்கள் கொண்ட குழுக்கள் உருவாக்கப்படும், இதன்போது ஒவ்வொரு குழுவும் ஒரு பிராந்தியத்திற்குப் பொறுப்பு வகிக்கும். ஒவ்வொரு பிராந்தியமும் ஆகக்குறைந்தது பத்து துணைப்பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு குழுவும் கட்டிட ஆணையத்தின் ஒரு உறுப்பினரால் வழிநடத்தப்படும். ஏனைய மூன்று குழு உறுப்பினர்கள் சங்க உறுப்பினர்களாக இருப்பார்கள், இதில் ஆகக்குறைந்தது இருவர் அந்த பிரதேசத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். குழுவின் ஒரு உறுப்பினராக இருப்பவர்

கட்டிட ஆணையத்தின் பொருளாளர் மாதாந்தம் ஒவ்வொரு குழுவும் சேர்த்த நிதியின் அளவு குறித்து ஆலயதின் அறிவிப்புப் பலகையில் அத்துடன் சங்கத்தின் இணையத்தளத்தில் வெளியிடவேண்டும். இதைவிடவும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் இந்த விபரங்கள் பட்டியலிட்டு வாசிப்பதன் மூலம் அறியத்தரப்பட வேண்டும்.

### விதி 28

கட்டிய ஆணையத்தின் யாப்பு அனுமதிக்கும் விடயங்களில் தலைவர், செயலாளருடன் அல்லது பொருளாளருடன் ஒன்றுசேர்ந்து இருவராக சங்கம் சம்பந்தமான அனைத்து விடயங்களிலும் சட்டரீதியான கையொப்பத்தை இடுவார்கள். தற்சமயம் தலைவரால் இயலாவிட்டால் தலைவருக்காக உபதலைவரும் மற்றும் செயலாளருக்காக உபசெயலாளரும் பிரதிநிதித்துவம் செய்வார்கள்.

## E. குருக்கள்

### விதி 29

சங்கக்கூட்டம் ஒரு அல்லது பல இந்துக் குருக்களைத் தேர்வுசெய்வார்கள், அவர்கள் தாம் விலகிச்செல்லும்வரை அல்லது சங்கக்கூட்டம் விலகுமாறு கேட்கும்வரை பணியில் இருப்பார்கள்.

### விதி 30

குருக்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து நிர்வாகசபை தீர்மானிக்கும்.

## F. கணக்குப் பரிசோதகர் பகுதி

### விதி 31

சங்கக்கூட்டம் கணக்குப் பரிசோதகர் பகுதியைத் தேர்வுசெய்யும். இதன் பதவிக்கால் ஒரு வருடமாகும்.

### விதி 32

சங்கக்கூட்டம் இரு கணக்குப் பரிசோதகர்களைத் தேர்வுசெய்யும், இவர்கள் நிர்வாகக்குழுவிலோ அல்லது கட்டிட ஆணையத்திலோ உறுப்பினர்களாக இருக்கக்கூடாது.

### விதி 33

கணக்குப் பரிசோதகர்கள் ஒன்றுசேர்ந்து நிர்வாகக்குழுவின் மற்றும் கட்டிட ஆணையத்தின் வருடாந்தக் கணக்கறிக்கையை பரிசீலிப்பர். இவர்கள் பொதுக்கூட்டத்தில் எழுத்துமூலமாக அல்லது நேரடியாக அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

## IV. நிதி மற்றும் திறன்கள்

### விதி 34

நிர்வாகக்குழு சங்க நிதியைக் கையாளும், மற்றும் கட்டிட ஆணையம் கட்டிட நிதியைக் கையாளும். சங்கநிதி மற்றும் கட்டிடநிதி வெவ்வேறு கணக்குகளில் ஒரு வங்கியில் வைப்பிலிடப்பட்டிருக்கும்.

பொதுக்கூட்டத்தில் இரு நிதிகளுக்கும் வெவ்வேறாக கணக்குக் காட்டப்பட வேண்டும்.

ஒவ்வொரு சங்க வருட நிறைவின் பின்பும், சங்க நிதியில் உறுப்பாக இருக்கும் எதுவும், அதன் தொகை Fr. 25'000.00 க்கு மேலதிகமாக இருந்தால், கட்டிட நிதிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

### விதி 35

சங்கத்தின் நிதி இதனூடகப் பெறப்படும்:

- உறுப்பினர்களின் வருடாந்தக் கட்டணம்
- நன்கொடைகள்
- அரச மற்றும் தனியார் நிறுவன நிதிப் பங்களிப்பு
- சங்க நடவடிக்கைகள் ஊடான வருமானம்

கட்டிட நிதி இதனூடகப் பெறப்படும்:

- சங்கநிதியிலிருந்து வருடாந்தம் பரிமாற்றுவது
- குறிப்பிட்ட தேவைக்கான நன்கொடைகள்
- சேகரிப்பு நிகழ்வுகள்

ஒருபக்கத்தில் கட்டிடநிதியத்தின் சொத்துக்களாக ஏற்கனவே உள்ள நிலங்கள் மற்றும் மறுபக்கத்தில் அனைத்து வங்கிக்கடன்கள், வேறுகட்டிடகடன்கள் மற்றும் அடமானங்கள் நிர்வகிக்கப்படுகின்றன.

### விதி 36

கட்டிட ஆணையத்தின் பொறுப்பில் ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்காகப் பணம் சேர்த்தால், அது கட்டிடநிதிக்கணக்கிற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். எந்தெந்தத் திட்டத்திற்காக எந்தெந்த நன்கொடையாளர்களிடம் இருந்து எவ்வளவு தொகை பெறப்பட்டது என்பதை எந்த நேரத்திலும் வழங்கும் வகையில் கட்டிட ஆணையம் பதிவுகளை வைத்திருக்க வேண்டும்.

எக்காரணத்திலாவது குறிப்பிட்ட திட்டம் நடைமுறைக்கு வரவில்லை என்றால், இந்தத் திட்டத்திற்காக வழங்கப்பட்ட நன்கொடைகள் அதை வழங்கிய நன்கொடையாளர்களுக்கு மீளவும் வழங்கப்பட வேண்டும்.

### விதி 37

Fr. 5'000.- வரையான பணத்தொகையை சங்க நிதியில் இருந்து ஒருமுறை செலவுசெய்யலாமென நிர்வாகம் முடிவுசெய்யலாம்.

Fr. 25'000.- வரையான பணத்தொகையை கட்டிடநிதியில் இருந்து ஒருமுறை செலவுசெய்யலாமென கட்டிட ஆணையம் முடிவுசெய்யலாம்.

செலவு இந்த எல்லைக்கு மேல் செல்லுமாக இருந்தால், சங்கக்கூட்டத்தின் கடனெடுக்கும் முடிவு தேவைப்படும்.

## V. யாப்பில் மாற்றம்

### விதி 38

இந்த யாப்பில் ஏதாவது மாற்றம் செய்வதானால், சங்கக்கூட்டத்தில் வழங்கப்படும் வாக்குகளில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒப்புதல் வழங்க வேண்டும்.

## VI. கலைத்தல் மற்றும் சொத்துக்களை நீக்குவது

### விதி 39

சங்கத்தைக் கலைப்பதற்கு சங்கக் கூட்டம் இருதடவை கூடி சம்மதத்தைத் தெரிவிக்கும் தேவை இருக்கும், இதன்போது இரு தடவைகளும் வழஙகப்பட்ட வாக்குகளில் நாலில் மூன்று பகுதியினர் சங்கத்தைக் கலைப்பதற்கு சம்மதிக்க வேண்டும். கலைப்பதற்கு எழுத்து மூலமான வாக்களிப்புக்கு அனுமதியில்லை.

இரண்டாவது சங்கக்கூட்டம் ஒரு மாதத்திற்கு முன்பாக நடைபெற வேண்டும் என்பதுடன் அடுத்த கூட்டம் முதல் சங்கக்கூட்டத்திற்கு இரண்டு மாதங்களுக்குப் பின்பு நடைபெற வேண்டும். இரண்டாவது கூட்ட அழைப்பிதழில் முதலாவது கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவு அறியத்தரப்பட வேண்டும்.

### விதி 40

சங்கம் கலைக்கப்படுமானால், சங்கத்தின் அனைத்துக் கடமைகளையும் நிர்வாகக்குழு நிறைவேற்ற வேண்டும். கட்டிட ஆணையம், செயல்படுத்தப்படாத திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து நன்கொடைகள் மற்றும் பங்களிப்புகளை திருப்பிச் செலுத்த வேண்டும்.

சங்கத்தின் இரண்டாவது பொதுக்கூட்டத்தின் தீர்மானத்தின்படி மீதமுள்ள சொத்துக்கள் பின்வரும் நிபந்தனைகளைக் கொண்டுள்ள ஒரு அமைப்பிற்கு மாற்றப்பட வேண்டும்: தற்சமயம் சங்கம் கலைக்கப்படுமானால், இலாபங்கள், மூலதனம் என்பன கலாச்சார நோக்கங்கள், தொண்டு செய்யும் அமைப்புகள் அல்லது பொதுமக்களின் தேவைகளுக்காகக் கொடுப்பதற்கு வரிவிலக்கு அளிக்கப்பட்ட சுவிசில் வசிக்கும் ஒரு ஒழுங்கான ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும்.
ஒரு இணைப்பாக இருந்தால், தொண்டு, பொது அல்லது கலாச்சார நோக்கங்களுக்காக, வரிவிலக்கு அளிக்கப்பட்ட சுவிசில் வசிக்கும் ஒழுங்கான ஒருவரால் நடத்தப்படலாம்.

***

மேலுள்ள யாப்பு சங்கக் கூட்டத்தால் 17.08.2010 இல் தீர்மானிக்கப்பட்டது. 07.03.2010 இல் வகுத்த யாப்புக்கு இது மாற்றீடானது. 09.01.2011, 18.11.2017 மற்றும் 18.09.2022 இல் சங்கக்கூட்டத்தால் மாற்றங்கள் செய்யப்பட்டது.

Bern, 10. தை 2023

நிர்வாகக்குழு சார்பில்

| | |
|---|---|
| தலைவர் | செயலாளர் |
| ராஜ்குமார் சிவநாதன், | றூபன்-வல்லிபுரம் துரைராஜா |